S.H.M. Jameel
24.10.2004

Ex-Libris SHM. Jameel
Donated to the Library
South Eastern University of Sri Lanka

DONATED by S.H.M. JAMEEL

# தலைவர் அஷ்ரஃப்

## நினைவு தின பேருரைகள்

MAIN LIBRARY, SEUSL
SJ009754

ரஊப் ஹக்கீம்
தேசியத் தலைவர்
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

009754 (1)

ஊடகப் பிரிவின் வெளியீடு

**ஏறாவூர் ஜாமிஉல் அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசலில் மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் நான்காவது நினைவு தினத்தையொட்டி 2004-09-16ந் திகதி இடம்பெற்ற கத்தமுல் குர்ஆன் வைபவத்தின் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆற்றிய உரை.**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
அஸ்ஸலாமு அலைக்கும்

மறைந்த எங்களுடைய தலைவரின் நினைவாக அவரது நான்காவது சிரார்த்த தினத்தை இப்படியான ஒரு வைபவத்தின் மூலம் இங்கு மீண்டும் நாங்கள் நினைவு கூறுகின்றோம். இந்தத் தருணத்தில் இந்தக் கட்சியுடைய சமகால அரசியலும் எதிர்காலமும் குறித்து மறைந்த தலைவருடைய கடந்தகால அரசியல் அனுபவங்களை உரசிப்பார்க்கின்ற ஒரு நிகழ்வாகத்தான் இந்நிகழ்வை நாங்கள் நடத்துகின்றோம் என்பதற்கு முத்தாய்ப்பாக எங்களுடைய கட்சியின் தவிசாளர் இன்றைய முஸ்லிம் அரசியலில் முஸ்லிம் காங்கிரஸூடைய தார்மீகப் பொறுப்பு என்ன என்பது சம்பந்தமாக அவருடைய கருத்துக்களை முன்வைத்தார்.

இந்த கட்சியுடைய தலைவர் என்ற அடிப்படையில் மறைந்த தலைவரை நாங்கள் எல்லோரும் அடையாளப்படுத்துவதில் இருக்கின்ற முக்கியமான அம்சம்தான், இந்த நாட்டு முஸ்லிம் அரசியலில் எத்தனையோ தலைவர்கள் இருந்தார்கள். சுதந்திரத்திற்கு முன்பு,

சுதந்திரத்திற்கு பின்பு என்று புகழ் பூத்த தலைவர்களாக நாங்கள் பலரைக் கண்டோம். ஆனால் அவர்களுக்கும், இவருக்குமிடையில் இருக்கின்ற ஒரே வித்தியாசம் மற்றத்தலைவர்கள் எல்லாம் வேறு ஏதோ ஒரு கட்சியின் தயவிலே தங்கி அரசியல் அந்தஸ்த்தைப் பெற்றவர்கள். எங்களுடைய மறைந்த தலைவர் மட்டும்தான் வேறு எந்தக் கட்சியின் அரசியல் தயவிலும் தங்கி இருக்காமல் தனக்கென்று, இந்த சமூகத்துக்கென்று ஒரு தனிக் கட்சி அமைத்து அதனூடாக இந்த சமூகத்தின் அரசியலை சரியான பாதையிலே வடிவமைத்து தந்திருக்கின்றார். முஸ்லிம்களுக்கு அரசியல் விடுதலையைப் பெற்றுத் தருகின்ற ஒரு போராட்டத்தை ஆரம்பித்து, இன்று முன்னைய முஸ்லிம் தலைவர்கள் எல்லாம் எந்தெந்த கட்சிகளின் தயவிலே தங்கி அரசியல் அந்தஸ்த்தைப் பெற்றார்களோ அந்தந்த கட்சிகள் இன்று முஸ்லிம் காங்கிரஸின் தயவிலே தங்களுடைய அரசியல் அந்தஸ்த்தை பெறுகின்ற, ஆட்சி உரிமையை அடைகின்ற, ஓர் ஏணியாக முஸ்லிம் காங்கிரஸ் மாறியிருக்கின்றது. இந்த மகோன்னதமான அரசியல் நிலைக்கு இந்த சமூகத்தை மறைந்த தலைவர் அவர்கள் இட்டு வந்தார் என்கின்ற அந்த ஒரு விடயத்தை, அவருடைய சாதனைக்கு மாபெரிய ஒரு உச்சக்கட்டமாக நாங்கள் எல்லோரும் அடையாளப்படுத்துகின்றோம்.

அவருடைய தனிப்பட்ட வாழ்வைப் பார்த்தால் அவர் ஒரு நல்ல தந்தையாக, ஒரு நல்ல கணவனாக, ஒரு தத்துவஞானியாக, ஓர் ஆன்மீக வாதியாக, ஒரு கவிஞனாக என்று பல கோணங்களிலே அவருடைய ஆளுமையை நாங்கள் அடையாளப்படுத்தலாம். இன்று எங்களுக்கும் இந்த நாட்டுக்கும் தேவையானது அவருடைய அரசியல் தலைமையில் அவர் எங்களுக்கு விட்டுச் சென்றிருக்கின்ற அனுபவங்களாகும். அந்த அனுபவங்களிலிருந்து அவர் எதிர்நோக்கிய அந்த சவால்களை விடவும் புதிய பல சவால்களை, அவர் விட்டுச் சென்றிருக்கின்ற இந்த சொத்து இன்று எதிர்நோக்குகின்றது. இன்று முஸ்லிம் சமூகத்தின் அரசியலில் தனிமனிதனுக்கெதிரான

சவாலாகத்தான் எல்லாவற்றையும் பார்க்கின்றார்கள். ரவூப் ஹக்கீமுக்கு எதிரான சவால், சவால் என்று அடிக்கடி பத்திரிகைகளிலே பல விதமான விடயங்கள் வெளிவருவதைப் பார்க்கலாம். இது எனக்கு தனிப்பட்ட முறையிலே வருகின்ற சவால்கள் அல்ல. இந்த முஸ்லிம் சமூகத்தின் தனித்துவமான அரசியலுக்கெதிராக வருகின்ற சவால்கள் என்று சரியாக பிரித்தறிய வேண்டிய ஒரு நுண்ணறிவு எங்கள் எல்லோரிடத்திலும் இருக்கவேண்டும், இருக்கின்றது என்ற நம்பிக்கையில்தான் நான் பேசுகின்றேன்.

முஸ்லிம் சமூகத்தின் அரசியலைப் பொறுத்தமட்டில் எங்களுக்கிருக்கின்ற சவால் என்று நாங்கள் அடையாளப்படுத்துவதாக இருந்தால் தனித்துவமான அரசியலை அதிகாரப் பதவிகளுக்கான ஒரு போட்டியாக இல்லாமல் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு போட்டியாக மாற்றுவது என்பதுதான் இன்றிருக்கின்ற சவாலாகும். இதைத்தான் தவிசாளர் அவர்கள் மிகவும் தெளிவாக எங்களுக்கு சுட்டிக்காட்டினார் என்று நான் நினைக்கின்றேன். இன்று பல கட்சிகள் முஸ்லிம்களிடத்திலே உருவாகியிருக்கின்றது என்று சொன்னால், அவையெல்லாம் தாங்களும் அமைச்சர்களாகி அரசியல் அந்தஸ்த்தை பெற வேண்டும் என்ற ஒரு நோக்கத்திலே என்பதை நாங்கள் இங்கு அடையாளப்படுத்தியிருக்கின்றோம். எனவேதான் முஸ்லிம் காங்கிரஸ் இந்த தருணத்தில் அமைச்சுப் பதவிகளை அடையக் கூடிய அனைத்து அருகதைகளும், அந்தஸ்த்தும் இருந்தும் கூட சுயவிருப்பத்தின் பெயரில் எதிர்க் கட்சியிலே இருக்கின்றது. எங்களுடைய நோக்கம் அமைச்சுப் பதவிகள் என்கின்ற இந்த சுகானுபவங்கள் அல்ல என்பதை இந்த சமூகத்தின் உண்மையான அரசியல் அடிநாதத்தை உணர்ந்து கொண்ட இந்தக் கட்சியின் போராளிகள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நாங்கள் இன்று விலகி இருக்கின்றோம்.

மறைந்த தலைவருக்கு இல்லாத ஓர் அனுபவத்தை நான் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன். தலைவருக்கும் எனக்குமிடையே இன்று நான் காணுகின்ற ஒரு அனுபவத்தை நான் இங்கு வருகின்ற போது சிந்தித்துக் கொண்டு வந்தேன். தலைவர் இன்று இருந்திருந்தால் இதை எப்படி அணுகி இருப்பார் என்பது எங்களுக்கு இதுவரை தெரியாத புரியாத ஒரு புதிராக இருக்கின்றது. ஏனென்றால் அவர் அந்த அனுபவத்தை காணவில்லை. கண்டு கொள்கின்ற சந்தர்ப்பம் அவருக்கு வாய்க்கவில்லை. ஒரு அமைச்சராக இருந்து விட்டு எதிர்க்கட்சியிலே இருக்கின்ற அந்த அனுபவம் ஒரு புதுவிதமான அனுபவம்.

தலைவர் எதிர்க்கட்சியிலே இருந்துவிட்டு, அமைச்சராகி அதனோடு அல்லாஹ் அவருடைய உயிரைப் பறித்துவிட்டான். அந்தப் பின்னணியிலே எதிர்க்கட்சியிலே அமர்ந்து மீண்டும் இந்த சமூகத்தின் அரசியலை வழிநடத்துவதில் எப்படியான அணுகுமுறைகளை அவர் கடைப்பிடித்திருப்பார் என்பதை எங்களால் இன்று யூகிக்க முடியாதிருக்கின்றது. ஆனால் அவர் அந்த ஆசையுடன் இருந்தார் என்பது அவரோடு நெருங்கிப் பழகிய பலருக்கும் தெரியும். நாங்களும் கண்டிருக்கின்றோம். அவருடைய அந்திமகால ஆசைகளில் ஒன்று அறுதிப் பெரும்பான்மையைத் தீர்மானிக்கின்ற சக்தியாக முஸ்லிம் காங்கிரஸை கொண்டுவர வேண்டும், கொண்டு வந்துவிட்டு நான் எதிர்க்கட்சியிலே அமர வேண்டும் என்ற ஒரு ஆசை அவருக்கு இருந்தது என்பதை அவரோடு கூட இருந்த பலர் கேட்டு, அறிந்து இன்று எங்களோடு பகிர்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அதை எப்படி அவர் அணுகி இருப்பார், எப்படியான அரசியல் பிரளயங்கள் ஏற்பட்டிருக்கும் என்பதை எங்களால் யூகிக்க முடியாமல் இருக்கின்றது.

அவரை விடவும் அரசியல் முதிர்ச்சியில் குறைந்தவனாக, குன்றியவனாக நான் இருந்தாலும் தலைமைப் பதவிக்கு வந்த கடந்த நான்கு வருடத்திற்குள் மூன்று பொதுத் தேர்தல்களை இந்த நாட்டிலே

கொண்டுவருகின்ற ஒரு முக்கிய அரசியல் புள்ளியாக நான் இருந்திருக்கின்றேன். நான்கு வருடங்களுக்குள் மூன்று பொதுத்தேர்தல்கள் வருகின்ற விசித்திரம் இந்த நாட்டிலே வேறு எந்தச் சமயத்திலும் நடக்கவில்லை என்று நினைக்கின்றேன். அந்த நிகழ்வு நடப்பதற்கு காரணம் முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற இந்த அரசியல் ஸ்தாபனத்தை தங்களுடைய ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக கூறு போடுகின்ற, பிரித்தெடுக்கின்ற இந்தக் கபடத்தனமான அரசியலில் மாறி, மாறி இரண்டு பிரதான கட்சிகளும் ஆடிய நாடகங்களின் விளைவாகும். இன்று அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாத ஒரு நிலையில் இந்த நாட்டின் தேசிய அரசியல் பெரியதொரு கலக்கல் நிலையிலே, ஒரு தேக்க நிலையிலே இருப்பதை நாங்கள் பார்க்கின்றோம்.

இன்று அந்த நிலையில் தான் முஸ்லிம்களுடைய அரசியலை எப்படி நகர்த்த வேண்டும் என்பதைப்பற்றி நாங்கள் சிந்திக்கின்றோம். இந்த சிந்தனைகள்தான் முஸ்லிம்களுடைய உரிமைப்போராட்டத்தை, வடிவமைப்பதில் அதனுடைய பங்களிப்பை அது எந்தத் தரப்பில் இருந்தாலும் எந்தப் பக்கத்தில் இருந்தாலும் மிகவும் கச்சிதமாகச் செய்திருக்கின்றது. அதன் விளைவாக இன்று ஆட்சிக் கதிரைகளில், அமைச்சுப் பதவிகளில் எவர் இருந்தாலும் அவர்கள் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் ஆதிக்கத்தை இல்லாமல் செய்துவிட வேண்டும் என்பதற்காகத்தான் தங்களுடைய அந்தஸ்த்துக்களை எல்லாம் பாவிக்கிறார்கள் எங்கின்ற நிலைக்கு வந்திருக்கின்றது. ஆனால், முஸ்லிம் காங்கிரஸுடைய அரசியல் அந்தஸ்த்தை யாருமே குறைத்து மதிப்பிடவும் முடியாது, மக்களிடத்திலே இருந்து இந்த மக்கள் இயக்கத்தை தூரப்படுத்துகின்ற முயற்சியிலே வெற்றி பெறவும் முடியாது என்பதை ஒவ்வொரு தேர்தலிலும் நாங்கள் பார்த்திருக்கின்றோம்.

மறைந்த தலைவருடைய அந்த அகால மறைவுக்குப் பிறகு நடந்த மூன்று தேர்தல்களிலும் முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற வாக்கு வங்கிகளை நீங்கள் ஒப்பீட்டு ரீதியாகப் பார்த்தால் வாக்கு வங்கிகள் வீழ்ச்சி என்கின்ற ஒரு விடயமே இல்லை. முஸ்லிம் காங்கிரஸ் அதில் வளர்ச்சி கண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதே நேரம் முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற அரசியல் ஸ்தாபனத்தோடு முரண்பட்ட ஒரு சிலரும் தங்களுடைய அரசியல் அந்தஸ்த்தை பெற்றுக்கொள்கின்ற வாய்ப்பு மட்டும் அல்ல, பாராளுமன்ற ஆசனங்களும் குறிப்பாக முஸ்லிம்களுக்கு வடகிழக்கிலே அதிகரித்திருக்கின்றது. அம்பாறை மாவட்டத்தை மட்டும் எடுத்துக்கொண்டால் மறைந்த தலைவருடைய வாழ்நாளிலே அவர் முஸ்லிம்களுக்கே உரித்தான மூன்று ஆசனங்களும் முஸ்லிம் காங்கிரஸுக்கே வரவேண்டும். என்று எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தார் முடியவில்லை. ஈற்றிலே சிங்களவர், தமிழரையும் சேர்த்து அவரால் அடையக் கிடைத்தது இரண்டே இரண்டு ஆசனங்கள் தான். அம்பாரை மாவட்டத்தில் இருப்பதே ஏழு ஆசனங்கள்தான் ஆனால் விசித்திரம் என்னவென்றால் அம்பாறை மாவட்டத்திலே இன்று முஸ்லிம்களே ஒன்பது பேர் இருக்கின்றார்கள். நேரடியாக தெரிவு செய்யப்பட்டவர்கள், தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் என்று அவருடைய மறைவுக்குப் பிறகு இன்று முஸ்லிம்களை அம்பாறை மாவட்டதிலே ஒன்பது பேர் பிரதிநிதித்துவப் படுத்துகின்றார்கள். அவ்வாறு கூடியும் இன்று முஸ்லிம்களுடைய அரசியலிலே எங்களுடைய இலக்குகளை அடைய முடியுமா என்பதிலே பெரிய தடுமாற்றம் நிலவுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த தேர்தலிலே எங்களுக்கு பெறக் கூடியதாக இருந்தது ஒரே ஓர் ஆசனம்தான். ஆனால் மூன்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை நாங்கள் பெற்றிருந்தோம். முஸ்லிம் காங்கிரஸ் என்ற இந்த அரசியல் ஸ்தாபனத்தை கூறு போட வேண்டும், பிளவுபடுத்த வேண்டும் என்ற முயற்சியின் ஒரு விளைவாக முஸ்லிம்களின் ஆசனத் தொகை கூடியிருக்கின்றது. ஆனால் அரசியல்

பலவீனப்பட்டிருக்கின்றது. இதில் இருந்துதான் இந்த சமூகத்தைக் காப்பாற்ற வேண்டும். எனவே முஸ்லிம்களுடைய அரசியல் பலம் என்பது அங்குமிங்குமாக சிதறியிருக்கின்ற ஆசனங்களில் தங்கியில்லை என்பதை நாங்கள் உணர்கின்றோம். அரசியல் பலத்தை இந்த ஆசனங்கள் ஓரணியில் இருந்து போராடுகின்ற ஒரு நிலைக்கு வருகின்ற போதுதான் அதை அடையமுடியும். ஆனால் ஓர் அணியிலே இருந்து போட்டியிடப் போனால் இத்தனை ஆசனங்களைப் பெறமுடியாது என்பதையும் நாங்கள் பார்த்திருக்கின்றோம். எனவேதான் இந்த விசித்திரங்களை அப்படியே வைத்துக்கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் தன்னுடைய அரசியலை இந்த சமூகத்தின் விடிவுக்காக நடத்துவது எப்படி என்பதற்கான ஒரு ஆரம்பத்தை இன்றைய சமகால அரசியலிலே நாங்கள் செய்ய வேண்டி இருக்கின்றது.

முஸ்லிம் காங்கிரஸிற்குள்ளேயே இன்று தலைமைத்துவத்துடன் முரண்பட்டுக்கொள்கின்ற மூன்று, நான்கு பேர் உருவாகிவிட்டார்கள். தன்னுடைய முழுப் பேரம்பேசும் சக்தியையும் பிரயோகித்துப் பெற்ற 10 ஆசனங்களில் இன்று 4 பேர் தலைமைத்துவத்தோடு முரண்படுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இவர்களை அரசின் அந்த ஆசைவார்த்தைகளிலிருந்து பாதுகாத்து முஸ்லிம் சமூகத்தின் விடுதலைப் போராட்டத்திற்காக அவர்களுடைய ஆசனங்களின் பலத்தை எப்படிப் பிரயோகிப்பது என்பது சம்பந்தமான இந்தப் போட்டியின் விளைவாகத்தான் தலைவருடைய நினைவு நிகழ்விலும் நாங்கள் ஒரு தளமாக வாழைச்சேனையை மாற்றியிருக்கின்றோம். அங்கிருக்கின்ற மக்களுக்கு இன்றிருக்கின்ற கள நிலவரத்தின் யதார்த்தங்களை நாங்கள் உணர்த்த வேண்டும். வாழைச்சேனையிலே இருக்கின்ற முஸ்லிம்களுக்கு மத்தியிலே சில உண்மைகளை நாங்கள் புரியவைக்க வேண்டும்.

கடந்த தேர்தலில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். கல்குடாத் தொகுதியா? மட்டக்களப்புத் தொகுதியா? யாருக்கு ஆசனம் என்பதில் நடந்தபோட்டி

எந்தத் தேவையுமில்லாத விபரீதங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால் இந்த சமூகத்தின் அரசியலைப்பற்றி நிதானமாக, பக்குவமாக சிந்திக்கின்ற ஆற்றல் உள்ளவர்களை அடையாளப்படுத்த வேண்டும் என்பதிலே தலைமை காட்டுகின்ற ஆர்வம் தனிநபர்களின் மீது தலைவர் காட்டுகின்ற ஒரு சலுகையாக பார்க்கப்படுகின்றது.

கடந்த கால அரசியலையும், இன்றைய சமகால அரசியலையும், எதிர்கால அரசியலையும் உற்று நோக்கி. எப்படி எங்களுடைய சவால்களை நாங்கள் எதிர்கொள்வது என்பது சம்பந்தமாக ஒரு சிந்தனைத் தலைமைத்துவத்தை வழங்குகின்ற அந்த வல்லமை எத்தனை பேருக்கு இருக்கின்றது என்பதைப்பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டி இருக்கின்றது. இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக எதிர்த்து நேற்று வந்தவர்கள், இன்று வந்தவர்கள் எல்லாம் கட்சிக்கு சொந்தம் கொண்டாடுகின்றார்கள் அதிலே பிரச்சினை இல்லை. கட்சி அனைவருக்குமாக திறந்து விடப்பட்ட ஓர் இயக்கம். இந்த இயக்கத்திலே இருந்து கொண்டு, இந்த இயக்கத்தைப் பலப்படுத்துவதற்காகத்தான் அவர்களைச் சேர்க்கின்றோம். ஆனால் வந்து சேர்பவர்கள் எல்லாம் இயக்கத்தைப் பலவீனப்படுத்துவதில் காட்டுகின்ற ஆர்வம்தான் கூடுதலாக இருக்கின்றது. எனவே அவர்களை இயக்கத்தை பலப்படுத்துகின்றவர்களாக மாற்றுகின்ற போராட்டத்தில் ஓர் அம்சமாகத்தான் நாங்கள் தலைவருடைய நினைவு நிகழ்ச்சிகளிலும் இந்தச் செய்திகளை மிகவும் பக்குவமாக, நிதானமாக, நேர்மையாக சொல்கின்றோம்.

தலைவருக்கு இரண்டு அற்புதமான பண்புகள் இருந்தன என்று நான் முன்பு ஒரு கூட்டத்திலே பேசியிருக்கின்றேன். அந்தப் பண்புகளில் ஒன்று தான் அவரிடத்திலேயிருந்த நேர்மையான கோபம். கோபத்திலும் பலவகை இருக்கின்றது. நேர்மையீனமான கோபமும் இருக்கின்றது, நேர்மையான கோபமுமிருக்கின்றது. சினம் என்று ஒன்று வருகின்ற பொழுது, சீறிப்பாய்கின்ற போது அதிலும் நேர்மை இருந்தால் நாங்கள்

அதைத் தாங்கிக் கொள்ளலாம். அவரிடத்திலே கோபம் கண்டபோது நேர்மையாகக் கோபப்பட்ட ஒருவராக அவரை நாங்கள் பார்த்தோம். அவரை கோபாவேசப்படுத்தியவர்களில், அவரோடு ஒரே அரசியல் முகாமில் இருந்து கொண்டு அவருக்கு எதிராக முரண்பட்டவர்கள் என்று ஒரு பெரிய, நீண்ட பட்டியலிருக்கின்றது. அந்தப் பட்டியலை நான் வாசித்துப் பார்க்கின்ற பொழுது எனக்கு ஓரளவுக்கு நிம்மதி. அந்தப் பட்டியலை விடவும் கூடுதலாக பகைவர்களை நான் சம்பாதித்துக் கொள்ளவில்லை என்கின்ற அளவுக்கு அவருக்கு நிறையப் பேர் குழி தோண்டியிருக்கின்றார்கள், நயவஞ்சகத்தனமாக நடந்திருக்கின்றார்கள். ஆனால் அவருடைய கோபத்தை நேர்மையான ஒரு கோபமாக நாங்கள் பார்த்தோம்.

இந்த சமூகத்தின் அரசியல் ஓர் அணியிலே இருந்து, முன்கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதில் அவர் காட்டிய ஆர்வத்தின் காரணமாக அவருடைய கோபம் நேர்மையானதாக இருந்தது. அதே நேரம் அதையும் மிஞ்சிய மானிடப் பண்பு அவரிடத்திலே இருந்தது. அதுதான் அவரிடத்திலே நான் கண்ட சேதமில்லாத விட்டுக்கொடுப்பு. எந்த விடயத்திலும் சமூகத்துக்கு சேதமில்லாத வகையில் விட்டுக்கொடுப்பைச் செய்வதில் அவருக்கு நிகர் அவராகத்தான் இருந்தார் இந்த சமூகத்தின் அரசியலை முன்னெடுத்துப் போவதிலே, நாங்கள் எங்களுக்குள் விட்டுக்கொடுப்பிலே மிகவும் கவனமாக இருந்து இந்த சமூகத்தின் அரசியலை நெறிப்படுத்தலாம் என்பதில் காட்டுகின்ற அந்த கவனம் முக்கியமானது. ஏனென்றால் பேச்சுவார்த்தை என்று வருகின்ற பொழுது, தீர்வுகள் என்று வருகின்ற பொழுது இந்த சேதமில்லாத விட்டுக்கொடுப்பு என்கின்ற அந்தப் பண்பு முக்கியமானது. அந்தப் பண்பை தலைவரிடத்திலே இருந்து நாங்கள் நிறையப் படித்திருக்கின்றோம். அவருடைய அரசியலிலே அவர் விட்டுச் சென்ற பல தடயங்களில் இந்த இரண்டு தடயங்களை மட்டும் நான் உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன். இதை விடவும் பல விடயங்களை நாங்கள் எங்களுக்குள்ளே பேசிக் கொள்ளலாம்.

கொள்கின்றேன். இதை விடவும் பல விடயங்களை நாங்கள் எங்களுக்குள்ளே பேசிக் கொள்ளலாம்.

இன்றிருக்கும் முஸ்லிம் சமூகத்தின் அரசியலை அதனுடைய வசந்த காலமாக நான் காணுகின்றேன். இன்று எதிர்க்கட்சியிலே இருந்து எங்களுடைய அரசியலை வழிப்படுத்துகின்ற, நெறிப்படுத்துகின்ற ஒரு வாய்ப்பு எங்களுக்கு வாய்த்திருக்கின்றது. எதிர்க்கட்சி அரசியலிலே இருந்து இதனை நெறிப்படுத்துகின்ற பொழுது இந்த தலைமைக்கு நேர்மையில்லாத, தேவையில்லாத பலவிதமான குற்றச் சாட்டுகள் சுமத்தப்படலாம். சாதாரண மாமுல் அரசியல் அமைச்சர்களிடத்திலே எதிர்பார்க்கின்ற எதிர்பார்ப்புக்களாக இல்லாமல் இந்த சமூகத்தின் அரசியலை மட்டும் மையப்படுத்தி, அதனுடைய உரிமைகளை முதன்மைப்படுத்தி ஒரு அரசியலை செய்யக் கூடிய வாய்ப்பு எங்களுக்கு வாய்த்திருக்கின்றது.

முஸ்லிம் சமூக அரசியலில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்ற, முஸ்லிம் காங்கிரஸில் பிளவுகளை ஏற்படுத்திய சக்திகள் இன்று ஆட்சிக் கதிரைகளில் அமர்ந்திருக்கின்றன. அந்த சக்திகளையும் இந்த சமூகத்தின் அரசியல் விமோசனத்திற்கான பாதையிலே ஒன்றுபடுத்துகின்ற, ஒரே நோக்கத்திலே செயற்பட வைக்கின்ற பணியை செய்ய வேண்டியிருக்கின்றது. சமூகத்துக்கான அரசியல் பேரம் பேசும் அந்த சந்தர்ப்பம் வாய்க்கின்ற பொழுது அவர்களை ஓரணியில் இருந்து போராடவைக்கின்ற அந்த நேர்மையான அரசியலை எங்களால் செய்துகாட்ட முடியும். அதற்கான ஒரு சபதத்தை தலைவருடைய நினைவாக நாங்கள் எடுக்க வேண்டும் என்பதுதான் அவருக்கு நாங்கள் செய்கின்ற மாபெரிய அஞ்சலி என்று சொல்லி உங்கள் மத்தியிலேயிருந்து பணிவண்புடன் விடைபெற்றுக் கொள்கிறேன்.

வாஆஹிறு த.்.வானா அனில்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் நான்காவது நினைவு தின நிகழ்வுகளின் போது 2004-09-16 ந் திகதி வாழைச்சேனை அந்-நூர் தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற ஞாபகார்த்தக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் ஆற்றிய உரை.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
அஸ்ஸலாமு அலைக்கும்

இந்த முன்றல், இந்த மேடை கடந்த 3 வருடகாலமாக எனக்குத் தந்திருக்கின்ற பரிச்சயம் முக்கியமானது. கலவர காலங்களில் நான் அமைச்சுப் பதவியிலிருந்த போது, பதற்றமடைந்திருந்த இந்தப் பிரதேசத்தின் மக்களுக்கு அமைச்சராக பதில் கூற வேண்டிய ஒரு நிலையிலே நான் உங்களை இந்த மண்டபத்தில் சந்தித்திருக்கின்றேன். உயிர்களையும், உடைமைகளையும் இழந்தபோது இங்கு இளைஞர்கள், பெரியவர்கள், தாய்மார்கள் என்று அனைவரும் ஆத்திரத்தாலும், ஆவேசத்தாலும் அலைமோதி அமைச்சர்களை விமர்சித்த ஒரு காலகட்டத்தில் உங்களை நான் இந்த இடத்தில் சந்தித்திருக்கின்றேன். அந்த அவலங்கள் ஓய்ந்து காலங்கடந்தாவது அரசாங்கம் அதற்கு நஷ்டஈடு கொடுத்த பொழுதும் உங்களை இதே இடத்தில் நான் சந்தித்திருக்கின்றேன். அன்று உங்களுடைய பாதுகாப்புக்கு பொறுப்புக் கூற வேண்டிய அமைச்சராக இருந்த நான் இன்று எதிர்க்கட்சி ஆசனங்களில் முஸ்லிம் காங்கிரஸின்

தலைவராக இருக்கின்றேன். மறைந்த தலைவரின் நினைவு தினமான இன்று இந்த மேடையிலே கட்சியின் எதிர்காலம் குறித்த எங்களுடைய அபிப்பிராயங்களை தலைவரின் அரசியலோடு உரசிப்பார்க்கின்ற ஓர் அரசியல் மேடையில் உங்களை நான் சந்திக்கின்றேன்.

அன்று நான் ஆட்சிக் கதிரையில் அமைச்சராக இருந்த பொழுது இந்த சமூகத்தின் பாதுகாப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவனாக இருந்தேன். அந்தப் பொறுப்பை இன்றும் வேறு கைகளிலே கொடுக்காமல் முஸ்லிம் சமூகத்தின் ஆளுங்கட்சி முஸ்லிம் காங்கிரஸ் தான் என்ற மக்கள் தந்த ஆணையின் அகம்பாவத்தோடுதான் இந்த மேடையிலே நான் உங்களை சந்திக்கின்றேன். முஸ்லிம் காங்கிரஸின் தலைமைக்கு இருக்கின்ற தார்மீகப் பொறுப்பென்பது, அதற்கு மக்கள் தந்திருக்கின்ற ஆணையாகும். அந்த ஆணையின் அடிப்படையிலே நாங்கள் அரச தரப்பில் இருந்தாலும், எதிர்த்தரப்பில் இருந்தாலும் முஸ்லிம்களுடைய ஆளும் கட்சி முஸ்லிம் காங்கிரஸ்தான் என்கின்ற அந்த அந்தஸ்த்தைப் பெற்றுக் கொடுத்த மாமனிதருக்கு நாங்கள் இன்று இந்த நினைவு விழாவை எடுக்கின்றோம். அவர் எதிர்க்கட்சியிலே இருந்த போது நாடு பூராகவும் இருக்கின்ற முஸ்லிம்கள் தங்களுக்கு நடக்கின்ற அத்தனை அநியாயங்களுக்கும் தீர்வு தேடி அவரைத்தான் நாடினார்கள். அமைச்சர்களுடைய ஆறுதல் வார்த்தைகள் அன்று மக்களுக்கு ஆறுதலாக அமையவில்லை. மறைந்த தலைவரின் ஆத்திரத்தையும், ஆவேசத்தையும் கூட்டியதைத்தவிர வேறு எதையுமே அன்றிருந்த ஐ.தே.க அமைச்சர்களால் செய்ய முடியவில்லை.

அன்று எதிர்க்கட்சியில் இருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடைய வார்த்தைகள்தான் இந்த சமூகத்திற்கு ஆறுதல் தருகின்ற வார்த்தைகளாக இருந்தன. அவர்களுக்கு நிரந்தரமான, நிம்மதி பெற்றுத்தருகின்ற போராட்டத்தைச் செய்கின்ற ஒரு போராட்டத் தலைமையாக அவர்கள் அன்று எதிர்க்கட்சியிலிருந்த தலைவரைப் பார்த்தார்கள். அவர் அமைச்சராக இருந்த போதும் ஆங்காங்கே

அசம்பாவிதங்கள் நடைபெற்றால் அதே தலைவரைத்தான் அவர் அமைச்சர் என்ற தோரணையில் அல்லாமல் எங்களுடைய தலைவர் என்ற தோரணையிலே இந்த நாட்டு முஸ்லிம்கள் பார்த்தார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் இயக்கத்திற்கு அவர் பெற்றுக் கொடுத்த அடையாளம் இங்கு முக்கியமானது. இந்த இயக்கத்திற்கு எதிராக இன்றிருக்கின்ற அத்தனை சவால்களையும் நாங்கள் எதிர் கொள்கின்ற பொழுது இதனை அடிப்படையாக வைத்து, இந்த விஷயங்களின் உண்மையான, பரிமாணத்தை புரிந்து கொண்டு பேச வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தன்னுடைய அரசியலை ஒவ்வொரு மாவட்டத்திலும் செய்தபோது, அதனுடைய எதிர்பார்ப்புக்கள் பல மடங்கு கூடுதலாக இருந்தபோது மறைந்த தலைவருடைய காலத்தில் அந்த இலக்குகளை நாங்கள் அடைய முடியவில்லை. அம்பாறையிலே மூன்று ஆசனங்களை பெற வேண்டும் என்று அவர் பட்டபாட்டை நாங்கள் எல்லோரும் நிறையப் பார்த்திருக்கின்றோம். அவருடைய ஆயுட் காலத்தில் அம்பாறை மாவட்டத்திலே போட்டியிட்டு ஆகக்கூடுதலாக இரண்டே இரண்டு ஆசனங்களைத்தான் அவரால் பெறமுடிந்தது. அம்பாறை மாவட்டத்திலே இருக்கின்ற முஸ்லிம்களுக்கு உரித்தான மூன்று ஆசனங்களைப் பெற வேண்டும் என்பதற்கான அவருடைய போராட்டம் அவருடைய ஆயுட்காலத்தில் பெறமுடியாமல் தான் அவர் எங்களை விட்டுப் பிரிந்துபோனார்.

மூன்று முஸ்லிம்களைப் பெற வேண்டும் என்று அவர் விரும்பிய அம்பாறை மாவட்டத்தில் அவருடைய மறைவுக்குப் பிறகு இன்று மூன்று மடங்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். மூன்றை யாசித்த தலைவருக்கு அவருடைய மறைவுக்குப் பிறகு ஒன்பது பேர் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். முழு அம்பாறை மாவட்டத்திலும் சிங்களவர், முஸ்லிம்கள், தமிழர்கள் எல்லோரும்

உட்பட தேர்தலின் போது பெற்றி பெறக் கூடிய ஆசனங்களே ஏழுதான். ஆனால் இன்றைய விசித்திரம் முஸ்லிம் காங்கிரஸில் நான்கு, முஸ்லிம் காங்கிரஸை எதிர்த்து வெளியில் நிற்பவர்களில் இன்னும் நான்கு பேர், ஆளும் கட்சியில் ஐக்கிய தேசியக் கட்சி மயோன் முஸ்தபாவுக்கும் ஒன்றைக் கொடுத்து எல்லாமாக 9 பேரை மூன்று பேர் என்று விரும்பிய நிலையில் நாங்கள் அம்பாரை மாவட்டத்தில் பெற்றிருக்கின்றோம்.

இப்படி நாங்கள் ஆகக் கூடுதலான ஆசனங்களை வைத்திருந்தாலும் இந்த சமூகத்துடைய விடுதலை, விமோசனம் என்பது இன்று விடைகாண முடியாத ஒரு பெரிய புதிராக இருக்கின்றது. ஆசனங்களின் தொகையை வைத்துப் பார்த்தால் அவை முஸ்லிம்களுக்கு விமோசனத்தைப் பெற்றுத் தருவதாக இல்லை என்பதை நாங்கள் இன்று உணர்கின்றோம். முஸ்லிம் காங்கிரஸின் பூர்வீகத்தை கொண்டவர்கள் இன்று பாராளுமன்றத்திலே ஆளும் தரப்பிலும், எதிர்க்கட்சியிலும் இருக்கின்றார்கள். ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும் சரி, அது முஸ்லிம் காங்கிரஸின் பூர்வீகத்தை கொண்டவர்களுக்குத் தான் ஆசனங்களைப் பெற்றுக்கொடுக்கின்றது. எனவே, முஸ்லிம் காங்கிரஸ் என்பது முஸ்லிம்களுடைய ஆளும்கட்சி என்று சொல்வதிலோ, அர்த்தப்படுத்துவதிலோ எந்த மாற்றுக் கருத்துக்களுக்கும் இடம் இருக்க முடியாது.

இன்று ஆளுங்கட்சியிலோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியிலோ பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளோ, அமைச்சுப் பதவிகளோ கொடுக்கின்றபோது முஸ்லிம் காங்கிரஸைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் அந்தப் பதவிகளைக் கொடுக்கின்றார்கள். இந்த நிலையில் தான் முஸ்லிம் காங்கிரஸ் இன்று வாழைச்சேனையிலே வந்து தலைவருடைய நினைவு தின வைபவங்களை நடத்துகின்றது. இன்னும் 40 நாட்களுக்கு அவருடைய பிறந்த தினம் வரை தேசிய ரீதியாக வைபவங்கள் நடைபெற இருக்கின்றன. அவரின் நினைவாக

இந்தக் கட்சி கடந்த காலத்தை அசைபோடுவது மட்டுமல்லாது, எதிர்காலத்திற்கான சரியான பாதைகளை வகுத்துக்கொள்வதற்காக அவருடைய தளத்தை அடியொட்டிப் போவதற்கான அந்த முயற்சியில் நாங்கள் எங்களுடைய முதல் அடியை இங்கு எடுத்து வைக்கின்றோம்.

கல்குடா தொகுதிக்கு ஆசனம் பெறுவதென்பது அபூர்வமான ஒரு விஷயமாக இருந்தது. காத்தான்குடியிலே இருக்கின்ற மக்களுடைய அந்த பிரதேச ரீதியான ஒற்றுமை கல்குடாத் தொகுதிக்கு ஆசனம் பெற முடியாத ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருந்தது. நான் தலைவராக வந்து நான்கு வருடங்களில் மூன்று பொதுத் தேர்தல்களை சந்தித்திருக்கின்றேன். மூன்று தேர்தல்களிலும் இந்தக் கல்குடாத் தொகுதியின் ஆசனம் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், ஆசனத்தைப் பாதுகாத்தும் அது கட்சிக்கு இல்லாததொரு ஆசனமாகப் போகின்ற அநியாயம், அடிக்கடி இங்கே அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. முஸ்லிம் காங்கிரஸ் இந்த மட்டக்களப்பு மாவட்டத்திலே இருக்கின்ற முஸ்லிம்கள் அனைவரையும் முஸ்லிம் காங்கிரஸின் நிழலிலே ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்பதைத்தான் தன்னுடைய குறிக்கோளாக கொண்டிருந்ததே ஒழிய ஒரு தனி நபருக்கோ அல்லது பிரதேசத்திற்கோ ஆசனத்தை மட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படவில்லை.

கடந்த பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கு முன்பு நான் காத்தான்குடிக்குப் போய் 'மத்ரஸத்துல் பழாஹ்' விலே அப்துல்லாஹ் ஹஸரத்தைக் கண்டு ''சகோதரர் ஹிஸ்புல்லாஹ்வை நீங்கள் முஸ்லிம் காங்கிரஸிலே கேட்குமாறு பணியுங்கள்'' என்று அவரிடத்தில் மன்றாடிக் கேட்டேன். ''முஸ்லிம் காங்கிரஸிலே அவர் வந்து கேட்டால் மட்டக்களப்பின் ஆசனம் அவருக்குப் போகும். அவருக்கு ஆசனம் கிடைக்கும் என்பதில் பெரிய பிரச்சினைகள் ஏற்படமுடியாது என்பதை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் நான் சொல்வதாக சொல்லுங்கள்'' என்று சொன்னேன்.

''கல்குடாத் தொகுதி மக்களுக்குரிய ஆசனத்தை முஸ்லிம் காங்கிரஸின் தலைவராகிய நான், வேறாக தேசியப் பட்டியல் மூலம் கொடுப்பதற்கு தயாராக இருக்கின்றேன். அதனால் ஹிஸ்புல்லாஹ்வை முஸ்லிம் காங்கிரஸில் கேட்கச் சொல்லுங்கள்" என்றும் சொன்னேன். அவருக்கு அந்தச் செய்தி போனபோது ''நாடு முழுவதும் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துக் கேட்க வேண்டும்" என்று அவர் நிபந்தனை விதித்தார்.

முஸ்லிம் காங்கிரஸில் அவர் கேட்க வேண்டுமானால், அதற்கு நாங்கள் இடம் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம். ஆனால், நாடு முழுவதும் தனித்துக் கேட்கச் சொல்கின்ற அரயசிலை முஸ்லிம் காங்கிரஸிற்கு அவர் கற்பிக்க வேண்டிய அவசியமில்லை. அவர் ஏன் சொன்னார் என்பது எங்களுக்குத் தெரியும். ஏனென்றால், அவர் அப்படி முஸ்லிம் காங்கிரஸைச் செய்ய வைத்திருந்தால் இன்று ஆட்சியிலே இருக்கின்ற இந்த அரசுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைப்பதென்பது மிகவும் இலகுவான விடயமாகப் போயிருக்கும். முஸ்லிம் காங்கிரஸின் ஆசனங்கள் ஐந்தாகக் குறுகியிருக்கும். நாங்கள் தனித்துப் போட்டியிடுவதன் மூலம் பல மாவட்டங்களில் வாக்குகளைப் பிரித்து ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் குறைய ஆசனங்களைப் பெற்று இந்த அரசு இலகுவாக அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிருக்கும்.

இன்று முஸ்லிம் காங்கிரஸின் ஆசனங்களின் பெறுமானம் எதுவுமே இல்லாமல் போயிருக்கின்றது. இன்று அந்தப் பெறுமானம் இல்லாமல் போயிருப்பதற்குக் காரணம் எந்த ஹிஸ்புல்லாஹ்வை எதிர்த்து கல்குடாத் தொகுதி மக்கள் ஒற்றுமைப்பட்டார்களோ அந்த மக்கள் ஒற்றுமைப்படுத்தி பெற்றுக் கொடுத்த ஆசனமாகும். எந்த ஆட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கக் கூடாது என்பதற்காக ஒரு தேர்தல் வியூகத்தை வகுத்தோமோ, எந்த தேர்தல் வியூகத்தின் மூலம் இந்த சமூகத்தின் பேரம் பேசும் சக்தியை நாங்கள் கூட்டவேண்டும்

என்பதற்கான முயற்சிகளை செய்தோமோ அந்த முயற்சி இன்று முறியடிக்கப்பட்டிருக்கின்றது. இதற்காகத்தான் நாங்கள் கல்குடாவுக்கு ஆசனம் பெற்றுத் தரவேண்டுமா? என்ற ஒரு கேள்வியை இன்று முஸ்லிம் காங்கிரஸ் கேட்டால் அது ஒரு பிழையாக முடியாது. எனவேதான், நாங்கள் பழையகதைகளை மீட்டிப் பார்க்க வேண்டியிருக்கின்றது. மறைந்த தலைவருடைய காலத்தில் இதே கல்குடாத் தொகுதியிலே அவருக்கு வேலி கட்டப்பட்டது,அவருக்கு கறுப்புக் கொடிகட்டப்பட்டது. அவருடைய வாகனத்தை இடித்து அந்த வாகனத்தின் கண்ணாடிகளுக்கு காறித் துப்பினார்கள்.

இன்றும் அதே கைங்கரியத்தை செய்து கொண்டிருக்கின்றார்கள். கல்குடா பள்ளிவாசல் சம்மேளனம், ஓட்டமாவடி பெரிய பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபை ஆகியவற்றின் தலைவராக வரவேண்டும் என்பதற்காக நான் அமைச்சராக இருந்த நேரம் நம்பிக்கையாளர் சபையின் பதவிக்காலத்தை நீடிக்க வேண்டுமென்று என்னிடத்தில் கோரிக்கை விடுத்தபோது நான் செய்து கொடுத்ததற்கு கைமாறாக அவர் செய்கின்ற பாரிய உபகாரம் நான் தலைவராக வருகின்ற போது கறுப்புக் கொடி கட்டுகின்றார்கள். இன்று மறைந்த தலைவருக்கு வெள்ளைக்கொடி கட்டுகின்ற போது அதையும் அறுக்கின்றார்கள்.

தற்போதைய தலைவருக்கு கறுப்புக்கொடிகட்டுவது, மறைந்த தலைவருக்கு கட்டுகின்ற வெள்ளைக் கொடியை அறுப்பது என்ற அரசியல் கலாச்சாரம் இன்று பள்ளிவாசல்கள் சம்மேளனம் என்ற போர்வையில் நடக்கின்றது. "நாங்கள் இவரை அடையாளப்படுத்துகின்றோம். நீங்கள் இவரை எங்களுக்கு வேட்பாளர் பட்டியலில் போட்டுத் தர வேண்டும்" என்று இதே பள்ளிவாயல் சம்மேளனம்தான் வந்து சொன்னது. அவ்வாறு சொன்ன போது இன்னும் சில வேட்பாளர்களை நிறுத்துகின்ற நிலைமை முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏற்பட்ட ஒரு சூழலில் அதற்கு நிபந்தனை போட்டார்கள். அப்படிப் போட்டால் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் ஓட்டமாவடி பிரதேசத்தில்

கேட்கின்ற நிலைமை உருவாகி கல்குடா தொகுதியின் ஆசனம் பறிபோய்விடும். அதற்கு நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள் என்று அன்று என்னிடம் கேட்கப்பட்ட போது ''கல்குடாத் தொகுதிக்கு ஆசனம் தருவது என்னுடைய பொறுப்பு. ஆனால் முஸ்லிம் காங்கிரஸுனுடைய வாக்குகளை கூட்டிக்கொள்வதற்கு என்னென்ன உத்திகளை நாங்கள் கையாள வேண்டுமோ அதனை கையாண்டுதான் ஆகவேண்டும். எவரை வேட்பாளர் பட்டியலில் போடவேண்டும் என்கின்ற நிபந்தனையை நீங்கள் போட முடியாது'' என்று சொன்னேன்.

கடந்த தேர்தலில் யூ. அஹமட் அவர்களை கொண்டு வந்து எங்களுக்கு வேட்பாளராக தந்த அதே நபர்தான் இன்று வேட்பாளராக நின்று வெற்றி பெற்றிருக்கின்றார். அவரை கொண்டுவந்து தந்துவிட்டு அவரை போடுவதற்கு மறைந்த எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் முகைதீன் அப்துல் காதர் மறுத்த பொழுது, அவரைக் கொண்டுபோய் ஐக்கிய தேசிய கட்சியில் நிறுத்தினார்கள். முஸ்லிம் காங்கிரஸின் வாக்கைப் பிரிப்பதில் பாராளுமன்ற உறுப்பினரும், அவரது சகோதரர்களும் தான் அன்று முன்னணியில் நின்று அவரை ஐக்கிய தேசிய கட்சிப் பட்டியலில் போட்டு, முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராக செயற்பட்டார்கள். அப்படிச் செயற்பட்டவர்களைத்தான் மீண்டும் இதே பள்ளிவாயல் சம்மேளனம் கூட்டிவந்து ஆசனம் கொடுக்குமாறு சொன்னது. கொடுத்தோம். ஆனால் இன்று, தலைவருடைய நினைவாக நடக்கின்ற இந்த மேடையைக் கூட பரிஷ்கரிக்கும் அளவுக்கு வந்திருக்கின்றார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் வாழைச்சேனையில் இக் கூட்டத்தை நடத்துவதற்கான காரணம் நாங்கள் 1989ல் இருந்து 1994 வரை எங்களது மறைந்த தலைவர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்த போது, மறைந்த எங்களுடைய முகைதீன் அப்துல் காதருடன் முரண்படுகின்ற சூழல் உருவாகியது. அந்த நிலையில் தான் அவருக்கு கறுப்புக்கொடி கட்டுகின்ற அந்த நிலைமை நடந்தது. அதன் பின்னர்

கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் ஆட்சிப்பொறுப்பை நாங்கள் இழந்தோம். அந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் முகைதீன் அப்துல் காதர் போட்டியிட்டார். மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி நகரசபையைத் தவிர வேறு ஆட்சி அதிகாரமுள்ள உள்ளூராட்சிச் சபை எதனையும் எங்களால் கைப்பற்ற முடியவில்லை. கோரளைப் பற்று மேற்கு பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை நாம் கைப்பற்றியிருக்க வேண்டும். ஆனால் முகைதீன் அப்துல் காதர் பிரிந்து நின்றதால் முஸ்லிம் காங்கிரஸால் அதைப் பெற முடியவில்லை.

முஸ்லிம் காங்கிரஸுடைய மறைந்த தலைவர் அம்பாறை மாவட்டத்தின் ஆறு முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகளில் முஸ்லிம் காங்கிரஸ் வெற்றிபெற விலையென்றால் எனது பாராளுமன்ற ஆசனத்தை துறப்பேன் என்ற சபதத்தோடு பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டார். ஒரு சில நூறு வாக்குகளினால் இரண்டு பிரதேச சபைகளின் ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றத் தவறிய காரணத்தினால் தனது சபதத்தை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற அந்த வைராக்கியத்தோடு அவர் செயற்பட்ட பின்னணியில் அவரின் இராஜினாமா முழு நாட்டையுமே உலுக்கியது. மறைந்த தலைவர் எம்.பி பதவியை பெற்றது மட்டுமல்லாது, இராஜினாமா செய்து காட்டிய தலைவராகவும் இருந்திருக்கின்றார். அவருடைய துணிவு அடுத்த தேர்தலிலே ஒரு பாரிய விளைவை ஏற்படுத்தியது. எந்த மூலையிலோ இருந்த சந்திரிக்காவை நாங்கள் ஆட்சிக்கதிரையிலே அமர்த்திக் காட்டுகின்ற அந்த கைங்கரியத்தை முஸ்லிம் காங்கிரஸ் செய்து காட்டியது. அதற்கு முன்பு அவருடைய தாயார் ஜனாதிபதி பதவியை பெறமுடியாமல் தடுத்ததும் முஸ்லிம் காங்கிரஸ் என்ற புதிய அரசியல் கட்சியேயாகும்.

1988 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியோடு முரண்பட்டு, பிரேமதாசாவை ஆட்சிக் கதிரையில் அமர்த்தியது முஸ்லிம் காங்கிரஸ். எந்த இந்திய இலங்கை ஒப்பந்தம்

முஸ்லிம்களுக்கு துரோகம் செய்தது என்று சொல்லி ஐக்கிய தேசிய கட்சியை நாங்கள் சாடினோமோ அதே ஐக்கிய தேசிய கட்சியை ஜனாதிபதி பதவியில் அமர வைத்தது முஸ்லிம் காங்கிரஸ். பிரேமதாச ஜனாதிபதி ஆட்சியை பிடிக்கவில்லை என்றால் அடுத்த பாராளுமன்ற தேர்தலிலே ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடைந்திருக்கும் என்பதிலே எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமிருக்க முடியாது. ஐக்கிய தேசிய கட்சியாக இருந்தாலும் சரி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தாலும் சரி மாறிமாறி அவர்களுக்கு ஆட்சி கதிரையை எட்டிப்பிடிப்பதற்கான ஏணியாக முஸ்லிம் காங்கிரஸ் இருந்திருக்கின்றது. இன்று இரண்டு கட்சியும் மாறி மாறி முஸ்லிம் காங்கிரஸை பந்தாடுகின்றார்கள். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் தனது இலக்குகளிலே இருந்து தவறமுடியாது.

முஸ்லிம்களை பற்றிய பார்வை தமிழ் தேசியத்திற்கு மத்தியில் வித்தியாசமாக இருந்தது. ஒரு காலத்தில் தமிழ் கட்சிகளிலே நிந்தவூர் முஸ்தபா உட்பட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குப் போனார்கள். தமிழ் கட்சிகளை ஏணியாக பாவித்து பாராளுமன்றம் போனவர்கள் அந்த கட்சிக்கு துரோகமிழைத்து கட்சி தாவினார்கள். அந்த வரலாறு தொடர்ந்தது. முஸ்லிம்கள் தமிழ் கட்சிகளை பாவித்து பாராளுமன்றம் போவது அதற்குப் பிறகு கட்சிதாவி ஏதாவது தேசிய கட்சிகளோடு சேர்ந்து ஆட்சிக் கதிரைகளிலே அமைச்சராவது என்கின்ற இந்த கைங்கரியம் தொடர்ந்து கொஞ்சக்காலம் நடந்தேறியது.

இன்று முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற தனித்துவமான அரசியல் இயக்கம் இருக்கின்றது. இந்த இயக்கத்திலே பாராளுமன்ற உறுப்பினர்களாக வருவது பிறகு எப்படியாவது தேசிய கட்சிகளோடு சேர்ந்து அமைச்சுப் பதவிகளுக்கு சோரம் போவது என்ற அந்தக் கலாசாரம் இன்னும் தொடர்கின்றது. இந்த அமைச்சுப்பதவிகளுக்கு, ஆட்சிக்கதிரைகளுக்கு சோரம் போகின்ற வரலாறு முஸ்லிம்களுடைய

அரசியலின் சாபக்கேடாக வந்துகொண்டேயிருக்கின்றது. முஸ்லிம் காங்கிரஸும் தமிழ் தேசிய கட்சிகளோடு சேர்ந்து அரசியல் செய்ய வேண்டும் என்றுதான் ஆரம்பத்திலே ஆசைப்பட்டது. தலைவர் அப்படித்தான் தனது அரசியலை ஆரம்பித்தார்.

அவர் அரசியலை ஆரம்பித்தபோது கிழக்கிலங்கை முஸ்லிம் ஐக்கிய முன்னணி என்று இணைந்து, 1977 ஆம் ஆண்டு தமிழர் விடுதலை கூட்டணியோடு ஒப்பந்தம் செய்து சம்சுதீனை நாங்கள் கல்முனையில் நிறுத்தினோம். நிறுத்தி வெற்றிகாணவில்லை. அதன் பின்னர் மாவட்ட அபிவிருத்திசபை தேர்தல் வந்த போது அதே தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து இதே கிழக்கிலங்கை முஸ்லிம் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களை நிறுத்த வேண்டுமென்று கேட்ட நிலையில் முஸ்லிம்களுடைய பெரும்பான்மை மாவட்டமான அம்பாறையில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் முஸ்லிம் ஒருவரை தலைமை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது. அதை தமிழர் விடுதலைக் கூட்டணி மறுத்து வேல்முருகு என்ற தமிழரை நிறுத்தியது.

அந்தத் துரோகத்தனத்தை எதிர்த்து அவர்களோடு முரண்பட்டுத்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் இயக்கம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற முதலாவது வித்து அங்கு இடப்பட்டது. அதன்பிறகுதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற தனித்துவ அடையாளத்துடன் கூடிய ஒரு கட்சி உருவாக வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியது. அந்தப் பின்னணியிலே ஆரம்பித்த இந்த இயக்கம் இன்று நாடு பூராவிலும் பரவி நாங்கள் இன்று பலமானதொரு அரசியல் இயக்கமாக இருக்கின்றோம். ஆனால் நாங்கள் பாராளுமன்றத் தேர்தல்களில் பெறுகின்ற வாக்குகளின் பெறுமானம் வெறும் தனிநபர்களின் சுயலாப ஆசையினால் இன்று பறிபோய்க் கொண்டிருக்கின்ற ஒரு சூழலில் மீண்டும் சந்திக்கின்றோம். பழைய தலைவரைப் பற்றி நினைத்துப் பார்க்கின்றோம். அபிவிருத்தி செய்ய வேண்டும் அமைச்சுக் கதிரைகள்

தான் எங்களுக்கு வேண்டும் என்று சொன்னால் தேசியக் கட்சிகளிலே போய் பாராளுமன்றத் தேர்தலை கேட்டிருக்கலாம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அரசியல் செய்ய வேண்டுமாக இருந்தால் முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கட்சியில் இருந்துதான் அரசியல் செய்ய வேண்டும் என்ற ஒரு முடிவை எடுத்தால் அதிலே இருந்து தாக்குப்பிடிக்கின்ற அந்த தைரியம் வேண்டும். இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கின்ற ஒரேயொரு சவால் கடந்த காலங்களிலே இழந்தவற்றை நாங்கள் மீளப்பெற வேண்டும். வாழைச்சேனை கலவரம் நடந்த போது முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியின் பங்காளியாக இருந்தது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்த போது நாங்கள் இழப்புக்களைச் சந்தித்திருக்கின்றோம். யுத்தம் நடந்த போதும் பல இழப்புக்களைச் சந்தித்திருக்கின்றோம். இன்று யுத்தமும் இல்லாத சமாதானமும் இல்லாத பேச்சுவார்த்தையும் இல்லாத ஒரு இடைக்காலத்திலே கட்சி தாவுகின்றதனால் மக்களுடைய மனங்களெல்லாம் ஒரு சலனத்தோடு இருக்கின்ற காலம். எதைச் செய்வதென்று சரியாகப் புரியாத காலம். பேச்சுவார்த்தையென்று ஒன்று வந்துவிட்டால் மீண்டும் முஸ்லிம் சமூகத்திற்குள் ஆங்காங்கே சலசலப்புக்கள் ஏற்படும். எங்களுடைய அந்தஸ்த்து என்ன என்பது சம்பந்தமாக எங்களுக்குள்ளான விவாதங்கள் ஆரம்பிக்கும். அதை நாங்கள் இன்றே வரையறுத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற வைராக்கியத்தோடுதான் இன்று எதிர்க்கட்சியில் இருக்கின்றோம்.

ஆளும் கட்சியில் இருந்த போது எங்களை பலவிதமாக குறைசொன்னார்கள். சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம் காங்கிரஸின் தலைவரே போயிருக்கக்கூடாது என்றார்கள். ஆளும் கட்சி தரப்பில் ஒரு அங்கமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் போனதென்பது முதலாவது படித்தரம். அதையும் செய்துகாட்டி அதன் பிறகுதான் நாங்கள் தனித்தரப்பு என்கின்ற அந்த இடத்திற்கான வித்தை இடவேண்டியிருந்தது. ஆரம்பகாலத்தில் நாங்கள் அதை மறுத்திருந்தால்

இன்று சர்வதேச சமூகம் எங்களை மறந்திருக்கும். இன்று சர்வதேச சமூகம் எங்களை நினைவுபடுத்தி அடிக்கடி வந்து சந்திக்கின்றது என்று சொன்னால் நாங்கள் ஆரம்பத்திலே அந்த அந்தஸ்த்தை வகுத்துக் கொண்டதுதான் காரணம். அதை வகுத்துக் கொள்வதற்கு முன்பே நாங்கள் தனித்தரப்பு வேண்டும் என்கின்ற அந்த விஷயத்தைச் சொல்லியிருந்தோம். சொல்லிவிட்டு ஒவ்வொரு பேச்சுவார்த்தையிலும் படிப்படியாக அதை வலியுறுத்தினோம். ஜப்பானிலே உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடந்த போது எழுபது நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் சேர்ந்து தங்களுடைய இறுதிப் பிரகடனத்திலே அதை சொன்னது. பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படுகின்ற பொழுது முஸ்லிம்களை தனித்தரப்பாக சேர்த்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென்று அவர்களை எழுத்திலே எழுதவைத்தது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகும்.

அதே உத்தரவாதத்தை ஐக்கிய தேசியக் கட்சி தந்தபோது, அந்த அரசாங்கம் மீண்டும் பதவிக்கு வந்து பேச்சுவார்த்தை தொடர்ந்தால் இந்த நிலை ஏற்பட வேண்டும் என்று சொன்னோம். இன்று ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அதற்காக அன்று பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து பாதயாத்திரை போனார்கள். கொழும்பிலே இருந்து செய்மதி தொலைக்காட்சியிலே ஜனாதிபதியைக் கொண்டு வந்து கல்முனையிலே பேசவைத்தார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தனித்தரப்பு தருவோம் என்று சொன்னார்கள். இன்று தனித்தரப்புத் தேவையில்லை என்ற புதியதொரு திருப்பத்தைச் சொல்ல விளைகின்றார்கள்.

முஸ்லிம்களுக்கு நிரந்தரமான நிம்மதியான வாழ்க்கை தேவையென்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் கடந்தகால அனுபவங்களினூடாகப் பெற்ற, கற்ற பாடங்களை வைத்துக் கொண்டுதான் இன்று ஆளும் கட்சிக் கதிரைகளிலே இருந்து விலகி நிற்கின்றோம். எங்களுக்குத் தரப்பட்ட உத்தரவாதங்கள்

நிறைவேற்றப்பட வேண்டுமென்று விடாப்பிடியாக நிற்கின்றோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுடைய ஆளும் கட்சி என்கின்ற அந்தஸ்த்தில் இருந்து கொண்டுதான் பேசுகின்றது. இதனுடைய குரல்வளையை நசிப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸின் அணிக்குள்ளே இருந்து எத்தனை பேர்தான் அட்டகாசம் பண்ணினாலும் முஸ்லிம்களுடைய பேச்சாளன் என்ற அந்த அருகதையை எங்களிடத்திலேயிருந்து பறித்துவிட முடியாது. அதற்கான போராட்டத்தை நாங்கள் செய்கின்ற போது இன்று ஒரு புதிய நிலைக்கு வந்திருக்கின்றோம்.

முஸ்லிம்களுடைய அரசியலிலே இன்று பிளவுபட்டு நிற்கின்ற அத்தனை சக்திகளையும் ஓரணியிலே திரட்டுகின்ற அந்த முயற்சியை நாங்கள் அமைச்சுப் பதவிகளில் இல்லாத போதும் செய்து வருகின்றோம். நாங்கள் அமைச்சுப் பதவிகளில் இருந்த போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை விமர்சித்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் நடடிக்கைகளை பற்றி தாறுமாறாகப் பேசி, இதனைக்கூறு போட்டுவிடலாம் என்று நினைத்தவர்கள் இன்று ஆளும் கட்சியில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சொல்வதெல்லாம் இனிமேலும் பேசவருகின்ற பொழுது அணியணியாகப் பிரிந்து நின்று தனியாகப் பேசுகின்ற இந்த அசிங்கத்தைச் செய்வதில் அர்த்தமில்லை. அதைவிடுத்து முஸ்லிம் காங்கிரஸ் தலைமையில் நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டுப் பேச வேண்டிய அவசியம் இருக்கின்றது என்று சொல்கின்றோம்.

தலைவர் உருவாக்கிவிட்டுச் சென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை இன்னுமொரு வடிவத்திலே பாக்கவேண்டுமென்று அமைத்த நுஆ. இவையெல்லாம் இன்று பாராளுமன்றத்திலே இருக்கின்றன. இவற்றையெல்லாம் ஓர் அணியிலே திரட்டுகின்ற முயற்சியை நாங்கள் செய்வது மட்டுமல்லாது பிளவுபட்டு நிற்கின்ற அனைவரையும் ஒன்றாக வந்து சேரவேண்டும் என்று

சொல்கின்றோம். இந்த நேரத்தில்தான் மறைந்த சகோதரர் மொஹிதீன் அப்துல் காதரை நான் நினைத்துப் பார்க்கின்றேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரோடு முரண்பட்டுக் கொண்டு விலகிப்போன அவர் அவருடைய அந்திம காலத்தில் வந்து எங்களோடு சேர்ந்துகொண்டார்கள். அவரிடத்தில் அசாமானியமான சில பண்புகளை, தைரியமான சில அரசியல் நடவடிக்கைகளை நான் பார்த்திருக்கின்றேன்.

இந்த கோரளைப்பற்று மத்தி என்ற பிரதேச செயலகம் மொஹிதீன் அப்துல் காதர் என்ற தனிமனிதர் இல்லையென்றால் இன்று உருவாகியிருக்க மாட்டாது என்பதையும் நான் சொல்லியாக வேண்டும். தலைவரோடு முரண்படுவதற்கு முன்பு அவர் விடாப்பிடியாக நின்று வென்றெடுத்த இந்த கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தை பெற்றதென்பது மாபெரிய வரலாறு. அதை அடைவதற்கு நிறைய எதிர்ப்புக்கள் இருந்தன. பட்ட கஷ்டங்கள் சாமானியமானவையல்ல. அத்தனை அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் அவர் செய்துவிட்டுச் சென்றிருக்கின்ற இந்தக் கைங்கரியம் முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் இயக்கத்திலே இருந்த காரணத்தினால்தான் அவரால் செய்ய முடிந்தது. ஒரு தனி மனிதனாக மொஹிதீன் அப்துல் காதர் அதைச் செய்யவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் இயக்கத்தின் அங்கமாய் இருந்து அரசிலே பேரம்பேசி அதைச் செய்கின்ற அந்த அசாமானியமான தைரியம் அவருக்கு உருவாகியிருந்தது. அவருடைய ஆரம்ப காலங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவரோடு அவர் முரண்பட்டார். என்னோடு முரண்பட்டார்.

பிரச்சினைகளுக்கு மத்தியில் சர்வசாதாரணமாக சில முரண்பாடுகள் ஆரம்பிக்கும். இன்று முரண்பட்டிருப்போருக்கு நான் சொல்கின்றேன். இன்று கறுப்புக் கொடிகள் கட்டலாம். நாங்கள் போடுகின்ற வெள்ளைக் கொடிகளை நீங்கள் வெட்டலாம். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ்

என்கின்ற அணியிலே இருந்தால்தான் ஆசனம் பெறலாம். இந்த ஆசனம் பெறுகின்ற அந்தஸ்த்து உங்களுக்கு வரவேண்டுமாக இருந்தால் நீங்கள் இங்கு அடைக்கலம் தேடவேண்டியிருக்கும். தலைமையுடன் முரண்படுகின்றபோது இந்தத் தலைமை உங்களுக்கு எந்தத் தவறையும் செய்யவில்லை என்பதை நீங்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். போதாக்குறைக்கு தாயாரையும் கொண்டுவந்து தேசியப் பட்டியலில் போட்டோம். எந்த வேட்பாளரின் தாயாரையாவது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வரலாற்றிலே தேசியப்பட்டியலில் போட்ட வரலாறு என்றால் அது சகோதரர் அமீரலியின் தாயாரைப் போட்ட வரலாறு மட்டும்தான் இருக்கின்றது. அவருக்குத்தான் அந்த அந்தஸ்த்து கிடைத்திருக்கின்றது. ''எங்களுக்கு அமீரலி தோற்றுப் போனால் அவருடைய வயது முதிர்ந்த தாயாரை முதலிலே நீங்கள் எம்.பி.யாக நியமித்துத்தரவேண்டும். தாயாருடைய பெயரை ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியலிலே போட வேண்டும்.'' என்று இதே பள்ளிவாசல் சம்மேளனம், இதே லெப்பை ஹாஜி, இதே கூட்டம் தான் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரை வந்து வற்புறுத்தியது. நாங்கள் போட்டோம். இந்த நிலையில் தான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவாதம் இருந்தது.

அமீரலி அப்போதுதான் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரானார். முஸ்லிம் காங்கிரஸின் அரசியலுக்கு வந்ததே இந்தத் தேர்தலில்தான். அவரை நாங்கள் சேர்த்திருக்கின்றோம். அவருக்கு அந்த அந்தஸ்த்தை மக்கள் கொடுத்திருக்கின்றார்கள். கட்சிக்குக் கிடைத்த வாக்குகளிலே அவர் இன்று பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார். இவருடைய பாராளுமன்ற ஆசனம் அபிவிருத்தி செய்வதற்கும். அமைச்சர் பதவி பெறுவதற்குமாக இருந்தால் அதை ஐக்கிய தேசியக் கட்சியிலோ, சுதந்திரக் கட்சியிலோ போட்டியிட்டு அவர் பெற்றிருக்கலாம். ஆனால் முஸ்லிம் காங்கிரஸிலே அந்த ஆசனம் இருக்க வேண்டுமாக இருந்தால் முஸ்லிம் காங்கிரஸ் எங்கு இருக்கின்றதோ அங்கே இருக்கின்ற அந்த தைரியம் இருக்க வேண்டும். அபிவிருத்தியை முஸ்லிம்

காங்கிரஸ் கொண்டுவந்து தரும். அது கௌரவத்துடனான அபிவிருத்தியாக இருக்கும். நாங்கள் எங்களுடைய சுயகௌரவத்தை விற்றுவிட்டு அபிவிருத்தி என்ற மாயையிலே அள்ளுப்பட்டுப் போகமுடியாது.

கோடான கோடி ரூபாக்களை இன்று வெளிநாடுகள் தருவதற்குத் தயங்குகின்றன. சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்த பிறகுதான் நாங்கள் இதை தரமுடியும் என்ற நிபந்தனையைப் போடுகின்றார்கள். சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்த பிறகுதான் பணம் கிடைக்கும். அந்தப் பணம் வருவதற்கு முன்பு எங்களுக்கும் அந்தப் பணத்திலே பங்கு வேண்டுமாக இருந்தால் சமாதானப் பேச்சுவார்த்தையில் எங்களது பங்கு வரையறுக்கப்பட வேண்டும். அதனால்தான் எங்களுக்கு தருவதாகச் சொல்லப்பட்ட அந்த தனித்தரப்பு அந்தஸ்த்தை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டுமென்று முஸ்லிம் காங்கிரஸ் சொல்லுகின்றது.

இந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸின் ஆசனங்களை எப்படியாவது தங்களது ஆளும் கட்சிக்கு ஆதரவாக பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்தான் எல்லோரும் குறியாக இருக்கின்றார்கள். ஜனாதிபதிப் பதவி என்பது இன்னும் ஒரிரு வருடங்களில் சந்திரிக்கா அம்மையாருக்கு அஸ்தமனம். அதன்பிறகு அவர் ஜனாதிபதி கதிரையிலே அமரவேண்டுமாக இருந்தால் இந்த நாட்டின் அரசியல் யாப்பையே மாற்ற வேண்டும். அதற்காக இந்த நாட்டின் பாராளுமன்றத் தேர்தல் முறையை மாற்றவேண்டும். அரசியல் நிர்ணய சபையாக பாராளுமன்றத்தை மாற்றவேண்டும். இந்த முயற்சியை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கின்றது. ஏனென்றால் ஜனாதிபதிப் பதவி என்பதுதான் இந்த நாட்டிலே இருக்கின்ற பிரதானமான கட்சிகளின் இனவாதப் போக்கை மாற்றி இருக்கின்றது. சந்திரிக்கா அம்மையார் ஓர் இனவாதி அல்ல என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ரணில் விக்கிரமசிங்க ஓர் இனவாதியல்ல என்பதையும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இவர்களை இனவாதிகள் அல்லாமல் ஆக்கியது இந்த ஜனாதிபதி

கதிரைக்கான ஆசை என்பதை நாங்கள் சொல்லிவைக்க விரும்புகின்றோம். ஜனாதிபதி கதிரையை எட்ட வேண்டுமாக இருந்தால் உட்காருவதற்கான அனுமதியை சிறுபான்மை இனங்கள் தரவேண்டுமாக இருந்தால் அவர்கள் தங்களுடைய இனவாதப் போக்குகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான் அடிப்படையாகவிருந்தது. அதற்காகத்தான் இன்று மாற்றங்கள் நடந்திருக்கின்றது. எனவே அந்தக் கதிரை முக்கியமானது. அதை நாங்கள் இல்லாமல் செய்வதில் அர்த்தமில்லை.

ஜனாதிபதி பதவியிலே இருக்கின்ற சர்வாதிகாரப் போக்கை மாற்றிக் கொள்ளலாம். அதற்கென்று உத்தேசத் திருத்தங்களைக் கொண்டு வந்தால் அதற்கு முஸ்லிம் காங்கிரஸ் கையை நீட்டத் தயாராக இருக்கின்றது. நீதிமன்றத்திற்கு வகை சொல்லத் தேவையில்லை. பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய அவசியமில்லை என்று இருக்கின்ற சரத்துக்களையெல்லாம் நாங்கள் நீக்கி விடலாம். நினைத்த நேரத்தில் பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரத்தையும் பறித்துவிடலாம்.

இன்று ஜே.வி.பி.யின் கைப்பொம்மையாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மாறி இருக்கின்றார். பாராளுமன்றத்தைக் கலைத்தால் தான் நாங்கள் சேர்வோம் என்று இந்த ஜே.வி.பி. சொன்னதின் காரணத்தினால் பாராளுமன்றத்தைக் கலைத்தார். கலைத்துவிட்டு இன்று 40 ஆசனங்களைக் கொண்ட அவர்களின் பணயக்கைதியாக சந்திரிக்கா மாறியிருக்கின்றார். இதன் விளைவு வடக்கிலே இருந்து கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்று கல்முனையிலே கிழக்கின் உதயம் மாநாடு. கல்முனையில் கிழக்கின் உதயமென நாடுமுழுவதிலும் இரவோடிரவாக போஸ்டர்கள். ஆனால் கல்முனையில் ஒரு போஸ்டர்கூட இருக்கவில்லை. மாநாட்டுக்கு முன்னைய தினம்தான் ஒருசில போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. கல்முனை நகர மண்டபம் முழுக்க பௌத்த மதகுருமாரும், மாற்று இனத்தவர்களும் வந்து

கூட்டம் நடத்தினார்கள். முஸ்லிம்கள் வெளியிலே இருந்து கூத்துப் பார்க்கின்றார்கள். ஏன்? முஸ்லிம் தேசியத்தை எப்படியாவது சிங்களத் தேசியத்தின் இனவாதப் போக்குகளோடு இணைத்துக் காட்டவேண்டும். அதற்கென்று ஒரு நாடகத்தை நடித்துக் காட்டவேண்டும் என்பது அவர்களது நோக்கம்.

முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது தமிழர்களுடைய போராட்டத்திற்கு எதிராக நிற்கவோ, சிங்களவருடைய போராட்டத்தை எதிர்ப்பதற்கோ அல்ல. எங்களுக்கென்று ஒரு தனியான வழியை வகுத்துக் கொள்வதற்காகவே நாங்கள் போராடுகின்றோம். யாருடைய வண்டியிலும் ஏறி சவாரி செய்து எங்களுடைய இலக்குகளை அடைவதென்பது இயலாத காரியம் என்பதை நாங்கள் அறிந்திருக்கின்றோம், கண்டிருக்கின்றோம். அனுபவத்தினாலே நிறைய பட்டிருக்கின்றோம். இந்த நிலையில் மீண்டும் முஸ்லிம்களைக் கொண்டு போய் சிங்களப் பேரினவாதம் அப்படியே காவுகொள்கின்ற முயற்சியில் ஒரு சில முஸ்லிம் அமைச்சர்களும் சேர்ந்து பக்கவாத்தியம் வாசிக்கின்ற ஒரு காலத்தில் நாங்கள் வாழ்கின்றோம். இந்த நிலையில்தான் முஸ்லிம் அரசியல் இன்னும் கூர்மையாக சிந்திக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது.

தமிழ்த் தேசியம் எங்களுக்கு நிறைய மாறு செய்திருக்கின்றது. ஆனாலும் எங்களுக்கு அநியாயம் இழைக்க இழைக்க எங்களது உரிமைகளை நாங்கள் வகுத்துக் கொள்கின்றோம். இங்கு சகோதரர் பஷீர் சேகு தாவூத் பேசினார். முஸ்லிம்களின் தேசியம் என்பது வலுவான ஒரு வேகத்தை அடைவதற்குக் காரணம் எங்களுக்கென்று ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டிய அந்தப் போராட்டம் வெற்றிபெற்றது என்று சொன்னார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மாணவர்கள் பாதுகாப்புப் காரணங்களுக்காக தற்காலிகமாக மட்டக்களப்பிலே பல்கலைக்கழக

கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த போது அவர்களை பலவந்தமாக வந்தாறுமூலைக்குப் போகச் சொன்னார்கள். நான், தலைவர், இன்னும் பலரும் போய் மன்றாடிக் கேட்டுப் பார்த்தோம். முடியவில்லை. தமிழ் பாராளுமன்றப் பிரநிதிகள் மறுத்தார்கள். போகத்தான் வேண்டும். முஸ்லிம்கள் வந்தாறுமூலைக்கு வந்துதான் ஆகவேண்டும் என்று அடம்பிடித்தார்கள். முஸ்லிம் மாணவர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றது. இந்தச் சூழலிலே மட்டக்களப்பிலே தங்கியாவது பயில அங்கே நடக்கின்ற தற்காலிக வகுப்புகளை நீங்கள் இல்லாமல் செய்துவிட வேண்டாம் என்று மன்றாடிக் கேட்டோம். மறுத்துவிட்டார்கள். வந்துதான் ஆகவேண்டும் என்று ஆணவத்தோடும், அகம்பாவத் தோடும் கதைத்தார்கள். அந்தப்பின்னணியிலே அமைந்ததுதான் ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

நியாயமான உரிமைகளை, நியாயமான காரணங்களை வைத்து நாங்கள் கேட்ட போது தமிழ்த் தேசியம் மறுத்ததனால் கிடைத்தது எங்களுக்கான பல்கலைக்கழகம். எனவே உரிமைகள் மறுக்கப்படுகின்ற போது அதற்கான போராட்டம் வேறு வெற்றிகளை எங்களுக்குப் பெற்றுத்தருகின்றது. அதற்காக தமிழ்த் தேசியத்தைக் கூறுபோடுகின்ற அவர்களுடைய அபிலாஷைகளுக்கு எதிராக நின்று போராடுகின்ற அரசியலை நாங்கள் செய்யவில்லை. இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்களுக்கென்று ஒரு தனி மாகாணத்தை தாருங்கள் என்று இன்றும் நியாயமாகத்தான் சொல்கின்றோம்.

கிழக்கைப் பிரியுங்கள் என்று முஸ்லிம் காங்கிரஸ் இதுவரையும் சொல்லவில்லை. இனியும் சொல்லப் போவதில்லை. அதாஉல்லாஹ் போன்ற அரசியல்வாதிகள் இன்று அமைச்சர் பதவிகளுக்காக கட்சிகளை அமைத்திருக்கின்றார்கள், அவர்கள் சொல்லலாம். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர் பதவிக்காக இந்தக் கட்சியை அமைக்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டும் ஒரே விஷயத்தைத்தான் சொல்லும். அமைச்சர் பதவியில் இருந்து கொண்டும் அதே விஷயத்தைத்தான் சொல்லும்.

இன்று ஆளும் கட்சியிலே இருக்கின்ற சில சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு அதாஉல்லாஹ் என்கின்ற இந்த அரசியல்வாதி பெரிய அனுகூலமான ஒரு பேர்வழி. அவரை வைத்து முஸ்லிம்கள், முஸ்லிம்களுடைய அரசியல் தலைமைகள் இன்று நாங்கள் சொல்லுகின்ற கோஷத்தை போட வேண்டும் என்ற விருப்பத்தோடு பேசுகின்றார்கள். அதை அடையலாம். ஆனால் நிம்மதியான வாழ்க்கையை முஸ்லிம்கள் அடைய முடியுமா?

எங்களுக்குரிய நிரந்தரமான தீர்வு என்பது சரிவர வடிவமைக்கப்பட்டு பெறப்படவேண்டும். இதற்காகத்தான் புலிகளோடு பேசினோம். பேசச் சென்றவர்கள் பிறகு பேசிவிட்டு வந்த விஷயங்களை விமர்சிக்கத் தொடங்கினார்கள். பேச்சுவார்த்தையின் பின்னணியிலே பல உத்தரவாதங்களை நாங்கள் வகுத்துக் கொண்டோம். இந்த நாட்டின் வரலாற்றிலே முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையில், தமிழ் தேசிய போராட்டத்திற்கும், முஸ்லிம்களுடைய அரசியல் சக்திக்கும் இடையிலே நடந்த ஒப்பந்தம் ஒரு சரித்திர ஆவணமாக மாறியிருக்கின்றது. அதை யாரும் கிழித்தெறிந்து விடமுடியாது.

பிரபாகரனோடு நாங்கள் ஒப்பந்தம் செய்து கொண்ட போது முஸ்லிம்களுக்கு நாங்கள் அடிமைசாசனம் எழுதிவிட்டதாக சொன்னார்கள். அது முஸ்லிம்களுக்கான அடிமைச் சாசனமாக இருந்தால் அதே ஆவணத்தை தமிழ்ச்செல்வன் அது இனி காலாவதியாகிவிட்டது. அதை கிழித்தெறிய வேண்டும் என்று சொல்வாரா? புலிகளோடு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் செய்து கொண்ட ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்று தமிழ்ச்செல்வன் கடந்த வருடம் சொன்னதன் உள் அர்த்தம் என்ன? புலிகள் தங்களுக்கு சாதகமான ஒன்றை கிழித்தெறிய முன்வருவார்களா? அந்த ஆவணம் காலாவதியாகி விட்டது என்று சொன்னதற்கு காரணம், அதில் முஸ்லிம் சமூகத்தின் நன்மைகளை கருதி முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த கருத்துக்களை உள்ளடக்கி அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததே

009754

ஆகும். அந்த ஒப்பந்தத்தைத் தான் துரோகத்தனமாக செய்தோம் என்று எம்மவர்கள் சொன்னார்கள். அதிலே இருக்கின்ற வார்த்தைகளுக்கெல்லாம் பலவிதமான அர்த்தங்களை கற்பிக்கவும் ஆரம்பித்தார்கள்.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலே நாங்கள் எங்களுக்குரிய காணிகளை திரும்பப்பெற்றோம். இன்று அந்த நிலைமை வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறுகின்ற விஷயமாக மாறிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், இதை சரிசெய்ய வேண்டும் என்பதற்காக மீண்டும் இந்த பேச்சுவார்த்தைகளை கிராமிய மட்டத்திலே ஆரம்பிக்க வேண்டும் என்று நாங்கள் நோர்வே தூதுக்குழுவிடத்திலே சொல்லி யிருக்கின்றோம்.

முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியலை மக்கள் மத்தியில் ஜனரஞ்சகமாகச் செய்ய வேண்டும் என்பதற்காக நாங்கள் இதை செய்யவில்லை. எங்களுடைய கடமையாக நாங்கள் இதை செய்கின்றோம். இதை செய்வதற்கு தடையாக, நேற்று, இன்று வந்தவர்களுக்கெல்லாம் கட்சியின் அந்தஸ்த்தை பெற்றவுடனேயே புதியதொரு அகங்காரமும், ஆணவமும் வந்து விடுகின்றது. ஆனால் இந்த அகங்காரம், ஆணவம் எல்லாம் ஒரு தேர்தல் வரும்வரை மட்டும்தான். அதற்கு பிறகு முஸ்லிம்களுடைய இந்த ஆளும்கட்சிதான் அவர்களுக்கு அடைக்கலம் என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது. எந்தத்தரப்பிலே அவர்கள் போய் அமைச்சர் பதவிகளை எடுத்து சோரம் போனாலும் அது அவர்களுக்கு அரசியல் அந்தஸ்த்தை ஈட்டிக்கொடுக்காது.

ஏனென்றால் இந்த சமூகம் தன்னுடைய அரசியலை எப்படி செய்ய வேண்டும் என்று பழக்கப்பட்டிருக்கின்றது. அதற்கென்று உருவாகி இருக்கின்ற இந்த கட்சியை இனிமேலும் பலவீனப்படுத்த முடியாது. நாங்கள் மறைந்த தலைவரை, அவருடைய நினைவுகளை

இரைமீட்டிக்கொள்கின்ற போது நடந்த அநியாயங்கள், பிரச்சினைகளுக்கு மத்தியில் இன்று இந்த கட்சி பலவிதமான கூறுகளாக பிளவுபட்டிருந் தாலும் இதன் வாக்குகள் ஒரு சதவீதமும் குறையவில்லை. நான்கு வருடங்களில் மூன்று தேர்தல்ளை சந்திக்கின்ற அந்த நிலைமைக்கு தள்ளப்பட்டவன் நான். இந்த நிலையிலும் முஸ்லிம் காங்கிரஸின் ஒரு வாக்குத்தானும் ஒரு மாவட்டத்திலும் குறையவில்லை. பலமடங்கு கூடியிருக்கின்றது. என்பதை நாங்கள் காட்டியிருக்கின்றோம்.

இன்னும் ஒருசில மாதங்களில் தேர்தல் வந்தாலும் இந்த கட்சிக்கு இருக்கின்ற வாக்குகளில் ஒரு சதவீதமேனும் குறையாமல் அதை கூட்டிப் பெருகின்ற அந்தஸ்த்தோடு இந்தக் கட்சி மக்கள் மத்தியிலே வாழவேண்டும் என்கின்ற அந்த வேட்கை முஸ்லிம்கள் மத்தியில் இன்று இருக்கின்றது. இந்த சக்தியை பேச்சுவார்த்தைகளின் பொழுது பலவீனப்படுத்த விடாமல்தான் நாங்கள் எங்களுடைய ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களையும், மாற்றுத்தரப்புக்கு போயிருக்கின்றவர்களையும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு செயற்படுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

இந்த சமூகத்தின் அரசியலை ஒரு போதும் முஸ்லிம் காங்கிரஸ் பலவீனப்படுத்தாது. அதை பலப்படுத்துவது தான் நாங்கள் எங்களுடைய மறைந்த தலைவருக்கு செய்கின்ற மாபெரிய அஞ்சலியாகும். அதை செய்வதற்காகத்தான் நாங்கள் இன்று வாழைச்சேனை யிலும் மேடை போட்டிருக்கின்றோம். அச்சுறுத்தல்களும், அடாவடித்தனங்களும் ஒரு பொழுதும் இந்த கட்சியை அழிப்பதற்கு வாய்ப்பாக அமைந்ததில்லை. இதை விடவும் பெரிய அடாவடித்தனங்களையும் அச்சுறுத்தல்களையும் சந்தித்திருக்கின்றோம். ஆனால் அவற்றுக்கு மத்தியிலும் இந்த கட்சி வாழ்ந்திருக்கின்றது, வாழப்போகின்றது. எனவே இந்த இயக்கத்தை பலப்படுத்துகின்ற அந்த பணியை கச்சிதமாகச் செய்த இந்த கல்குடா தொகுதி மக்களிடத்திலே முஸ்லிம் காங்கிரஸின் தலைமை சொல்லுவதெல்லாம் தனிமனிதர்களின் கைகளிலே இந்த கட்சி

இனியொரு பொழுதும் இருக்கக்கூடாது. இது சமூகத்தினுடைய சொத்து. மறைந்த தலைவர் எமக்கு விட்டுச் சென்றிருக்கின்ற மாபெரிய பொக்கிஷம். இதை பாதுகாக்கின்ற பணியை நீங்கள் செய்ய வேண்டும் நீங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டு உங்கள் மத்தியிலே இருந்து பணிவன்புடன் விடைபெறுகின்றேன்.

வஆஹிறு த'.வானா அனில் ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.

வஸ்ஸலாம்.

LIBRA
25 NOV 2011

009754